# ஆய்த எழுத்து

தமிழியல் ஆய்வு இதழ்

காலாண்டிதழ்

ஜனவரி – 2016

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN: 2278-7550




visit us: www.pallavipathippakam.in | DOAJ DIRECTORY OF OPEN ACCESS JOURNALS Google scholar

முனைவர் அ. சத்யா

# ஆய்த எழுத்து

## தமிழியல் ஆய்வு இதழ்

INTERNATIONAL JOURNAL FOR TAMIL STUDIES ISSN : 2278-7550

மலர் : 4 ஜனவரி - 2016 இதழ் : 1

**கௌரவ ஆசிரியர்**
முனைவர் சொ. சுப்பையா
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.


**இணை ஆசிரியர்**
முனைவர் க. இரமேஷ்
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,வேலூர்.

**சிறப்பாசிரியர்**
முனைவர் அ. அறிவுநம்பி
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி

**துணை ஆசிரியர்**
முனைவர் போ. சத்தியமூர்த்தி
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்,மதுரை.

**ஆசிரியர்**
முனைவர் சி. தியாகராசன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

**பதிப்பாசிரியர்**
நல். நடராசன்
தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.






**0424**
**4562211,2263197**
**94422 51549**
**96291 82383**

**pallavipublications@gmail.com**
**ayidhaezhuthu@gmail.com**

**பல்லவி பதிப்பகம்**
194,கண்ணா காம்ளக்ஸ் , இரண்டாவது தளம்,
மேட்டூர் சாலை, ஈரோடு-638011.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1.சோழ நாட்டின் மருமகள் காவேரி - | முனைவர்.க.ஆனந்தி | 5 |
| 2.இயேசு காவியத்தில் உவமைகள் - | முனைவர்.தா.க.அனுராதா | 8 |
| 3.குழந்தைப் பாடல்களில் கல்வி - | சு.அய்யனார் | 11 |
| 4.குறுந்தொகை வழிபாடு - | அ.ஜெனார்த்தலிபேகம் | 14 |
| 5.அறமும் புறமும் காட்டும் கல்வி - | சு.கௌரி | 17 |
| 6.தமிழ்மொழி வளர்ச்சியில் தெளிதமிழ் திங்களிதழ் - | க.கண்ணன் | 22 |
| 7.வழிபாட்டில் பண்பாடு - | பேரா.முனைவர்.மு.குருவம்மாள் | 25 |
| 8.கடல்சார் மக்கள் வாழ்வு ஆறுகாட்டுத்துறை புதினத்தை முன்வைத்து - | முனைவர்.வீ.மீனாட்சி | 26 |
| 9.பக்தியில் ஆண்டாளும் மீராவும் - | முனைவர்.க.மீரா | 29 |
| 10.தாலாட்டுப் பாடல்கள்-சிறப்பு - | முனைவர்.க.முத்தழகி | 32 |
| 11.வணிக நாவல்களில் பாத்திரபடைப்பு - | கே.பிரதிபா | 35 |
| 12.பிரபஞ்ச வைராக்கியம் - | முனைவர்.ப.பிரியா | 38 |
| 13.இரந்தார்க்கு இன்முகம் - | முனைவர்.மு.புஷ்பாரெஜினா | 40 |
| 14.ராஜம் கிருஷ்ணன் புதினங்களில் பெண்ணியம் - | து.புஷ்பவள்ளி | 43 |
| 15.சங்க அக இலக்கியங்களில் முல்லை வருணனை - | ச.ராஜேஸ் | 46 |
| 16.பெருஞ்சொல்லகராதியின் அமைப்பும் சிறப்பும் - | முனைவர்.சு.சத்தியா | 50 |
| 17.பண்டைய இலக்கியத்தில் விழாக்கள் - | முனைவர்.பி.சேதுராமன் | 56 |
| 18.இரட்டைக் காப்பியங்களில் பெண்களின்' சிறப்புக்களும் பாவேந்தரின் ஒத்தக்கருத்து - | மா.விஜயலெட்சுமி | 60 |
| 19.இல்வாழ்வின் மேன்மை; திருக்குறளும் இன்னிலையும் - | முனைவர்.மு.வையபுரி | 63 |
| 20.தொடக்க நிலையில் தமிழ்பாடம் கற்பித்தல் திறன் - | முனைவர் மெ.வனிதா | 66 |
| 23.தமிழில் விளிம்புநிலைத் தன்வரலாறுகள் - | எம்.எம்.ஜெயசீலன் | 78 |
| 21.சங்க இலக்கியத்தாவரங்களின் மருத்துவப் பயன்கள் (பிரண்டை, பீரம்) - | பா.ஆரோக்கியதாஸ் | 71 |
| 22.குறுந்தொகையில் மலர்கள் - | தா.பத்மா | 74 |
| 24.உலக அரங்கில் எதிர்ப்புக் கவிதை வரலாறு - | திரு.செல்லத்துரைசுதர்சன்<br>முனைவர்.போ.சத்தியமூர்த்தி | 84 |

# தாலாட்டுப் பாடல்கள் - சிறப்பு

**முனைவர் க.முத்தழகி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி,
தஞ்சாவூர்.

நாட்டுப்புறவியல் என்பது Folklore என்று சொல்லப்படுகிறது. 1846இல் Folklore என்ற சொல் ஜான் தாமஸ் என்பவரால் உருவாக்கப்பட்டது. நாட்டுப்புறப்பாடல்கள் மூன்று பிரிவுகளாகப் பகுக்கப்படுகிறது. 1. மழலை(குழந்தை, விளையாட்டுப் பாடல்கள்), 2. இளமை(காதல், தொழில், திருமண பாடல்கள்), 3. முதுமை (பக்திப்பாடல்கள்) தாலாட்டு பண்பாட்டியல் என வழங்கப்படுகிறது.

கலையருவியின் தாயூற்றாக விளங்கும் "தாலாட்டு" தாய் தன் மகளுக்குத் தரும் சீர் வரிசைகளில் தலையாய ஒன்று ஆகும். காட்டு வெள்ளம் போல் வரும் தாயின் மனஎழுச்சியை தாலாட்டில் கண்ட ஆழ்வார்கள் பிற்கால கவிஞர்கள் முதலியோர் இப்பாடல் வகைக்கு மெருகேற்றி, பிள்ளைத்தமிழாகவும், தேவர் தேவியர் தாலாட்டுகளாகவும், யாப்பிலக்கணக் கட்டுக்கோப்பில் அடக்கிப் பாடல்கள் இயற்றியுள்ளனர்.

**தாலாட்டு**

"தாய்மை உணர்வின் வெளிப்பாடு தாலாட்டாக மலர்கிறது. தாயின் நாவசைவில் தாலாட்டு என்னும் நல்முத்து பிறக்கிறது" (அறு.இராமநாதன்,1980:28)

"தாய்மார்கள் இனிய குரலில் எளிய மொழியில் அன்புகனியக் கனியப் பாடுவதே தாலாட்டு எனப்படும்" (சு.சண்முகசுந்தரம்,1950:51)

"நன்கலம் நன்மக்கள் பேறு என்பர் திருவள்ளுவர். குழந்தையின் அழுகையை நிறுத்தும் அருமருந்து தாலாட்டு என்பர்" (அறு.இராமநாதன்,2001:99)

"தாயின் அன்பையும், சேயைச் சுற்றி எழும் கற்பனையையும் பாடலாக வழங்கும் பாட்டுவரும் தாலாட்டாகும்" (நா.வானமாமலை,1964:81)

**தாலாட்டு – சொல் விளக்கம்**

தால் - நாக்கு, நாக்கை ஆட்டி, சுழற்றி பாடுவதால், தால் + ஆட்டு = தாலாட்டு எனப் பெயர் பெறலாயிற்று.

இதனை ஓராட்டு என்பர் தாய்மார். இடைக்கால இலக்கியம் "தாராட்டு" என்றும், பிள்ளைத்தமிழ் தாலேலோ என்றும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

**இலக்கியங்களில் தாலாட்டு**

**"வரையழி வாலருவி வாதாலாட்ட"**

**"ஒலுடன் ஆட்ட" (இறையனார் களவியல் உரை)**

**"தேறை தாராட்டும் பண்ணை"** (கம்பராமாயணம்)

**"தாரா ரார் என்று தாலாட்டினாள்" (விறலிவிடுதூது)**

"ஊமன் தாராட்ட உறங்கிற்றே"
(முத்தொள்ளாயிரம்)

**தாலாட்டின் வரலாறு**

தமிழில் முதலில் தாலாட்டு பாடியவர் பெரியாழ்வார். தொல்காப்பியப் புறத்திணை இயல் பாடாண் திணையில்,

**"குழவி மருங்கினும் கிழவதாகும்"** என்பதில் இறைவன், மன்னன், வரலாற்று சிறப்பு மிக்கவர்களை குழந்தையாகப் பாவித்து பாடப்படுவதாகும் என்று அறிய முடிகிறது.

பெரியாழ்வாரைத் தொடர்ந்து குலசேகர ஆழ்வார் இராமன் வரலாற்றை பத்துப் பாடல்களில் தாலாட்டாகப் பாடியுள்ளார். தாம் யசோதை நிலையில் நின்று கண்ணனைக் கொஞ்சி குலவி, திருமேனி அழகையும், திருவவதாரச் சிறப்பையும் எடுத்துக்காட்டும் பெரியாழ்வாரின் பாடல் நெறியானது பிற்காலத்தில் தனித் தாலாட்டுப் பிரபந்தமாகவும், பிள்ளைத்தமிழில் தாலப் பருவமாகவும் விளங்கி இருக்கிறது.

**தாலாட்டின் சிறப்பு நிலை**

15ஆம் நூற்றாண்டு முதல் தாலாட்டு பிரபந்த நிலையைப் பெற்றது. கீதாசாரத் தாலாட்டு மிகவும் பெயர் பெற்ற ஒன்று.

**தாலாட்டு பாடியவர்கள்**

சீர்காழி சிற்றம்பல அடிகள் முதற்கொண்டு திருவிடைமருதூர் நாயக்கர் மீது பாடிய உ.வே.சாமிநாதர் வரை பாடிய தாலாட்டு வகைகள் தொல்காப்பியத்தை அடிப்படையாக கொண்டே பாடப்பட்டிருக்கிறது.

நாட்டுப்புறப்பாடல்களின் சாயலை முழுமையாக கொண்டு சிறுமணியூர் முனுசாமி முதலியார் பாடல்கள் மிகுதியாகப் பாடியுள்ளார்.

**தாலாட்டின் அமைப்பு**

"தாய் ஆழம் காணமுடியாத அன்புக் கடல், அக்கடலில் விளைந்த வலம்புரி முத்தே தாலாட்டு", தாயின் மனநிலைக்கு ஏற்ப பலூன் போன்று அதிகம் நீளுவதும், குறைவதும் உண்டு.

தாலாட்டின் பண் நீலாம்பரி ஆகும். தாலாட்டு மூன்று வயதுவரைப் பாடப்படுவது. சிதையாமல் வர இரண்டு காரணம் உண்டு. தாலாட்டு எழுதப்படாமல் வாய்மொழி இலக்கியமாகவே இருப்பதுவும், நினைத்தபோது நினைத்தபடி பாடுமாற்றால் தாய்மார்க்கு இருப்பதுவுமே காரணமாகும்.

**தாலாட்டுப் பாடல்களின் தொடக்கம்**

தாலாட்டுப் பாடல்களின் தொடக்கம் நாவசைவின் ஒலிகளேயாகும். சான்றாக,

பொருளற்ற ஒலிகளாக அமைவது:

1. ஆராரோ ஆரிராரோ

   ஆராரோ ஆரிராரோ

2. ராராரோ ராரிராரோ

   ராராரோ ராரிராரோ

3. ருரிரோ ருரிரே

   ருரிரோ ருரிரே

**பொருள்பட அமைவது**

1. கண்ணே
2. என் ஐயா நீ
3. எம் அம்மா நீ

**தாலாட்டுப்பாடலின் கருத்து**

1. குழந்தையின் சிறப்பு
2. குழந்தை பெற்றமைக்கு சிறப்பு
3. குழந்தையின் - உறவினர் சிறப்பு
4. குழந்தை பெறுவதற்கான நோன்பு
5. குழந்தையில்லாத போது பட்ட வேதனை

**குழந்தை பெற்றமைக்கு சிறப்பு**

திருமணமான பெண்ணிடம் முதலில் தாயாக வேண்டும் என்ற எண்ணங்கள் தோன்றுவது இயல்பு. இச்சூழலைச் சமூகமே செய்கின்றது. தன் மகனைப் பெற்றெடுக்க எங்கெங்கு சென்றாள், எப்படியெல்லாம் சடங்குகள் செய்தாள் என்பதை வெளிப்படுத்துகிறார்.

**"தில்லைவனம் போனோம்மா**

**தில்லைவனம் தேவமாதா – எனக்கு**

**புள்ளி கனி தீத்தாளம்மா**

**ராராரோ ராரிராரோ என் கண்ணே**

**ராராரோ ராரிராரோ**

**மஞ்சன இல்ல என்று சொல்லி**

**மாயவரம் போனேனம்மா**

**மாயவரம் தேவமாதா – என்**

**மஞ்சன் கனி தீத்தாளம்மா"**

தில்லை வன தேவமாதா தனக்கு பெண் பிள்ளை தந்தாள் என்றும், ஆண்பிள்ளை வேண்டும் என வேண்டிக்கொண்டு மாயவரம் சென்று வந்தேன் என்றும் பாடுகிறாள்.

தாய் தன் குழந்தைக்கு பாதுகாப்பு தருவதற்காக இறைவனை வேண்டி பாடுகிறாள்.

**"ராராரோ ராரிராரோ**

**ராராரோ ராரிராரோ – அம்மா**

கண்ணபுரத்தாளே உனக்கு

காவலாக இருப்பாளே – அம்மா (ராராரோ)

சமயபுரத்தாலே

சகல வரமும் தருவாளே அம்மா (ராராரோ)

அன்பில் தாயே – உனக்கு

அன்னையாக இருப்பாளே

அனைத்து வரமும் தருவாளே அம்மா (ராராரோ)

வீரசிங்கம்பேட்டையாளே – உனக்கு

வீரவாளெடுத்து வருவாளே அம்மா (ராராரோ)

புன்னைநல்லூர் மாரியே உனக்கு

புகழாரம் சூட்டிக்கொண்டு வருவாளே (ராராரோ)"

அனைத்து வரங்களும் தனது குழந்தைக்கு கிடைக்க வேண்டும் என தாய் விரும்புவதை வெளிபடுத்துகிறது இந்த பாடல்.

### குழந்தையை வருணித்தல்

"காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்னும் பழமொழிக்கு ஏற்ப, தாய் தன் குழந்தையை, உயர்வாகவும் சிறப்பாகவும் கருதுவாள்.

"கண்ணே நீ கண்ணுறங்கு

கண்மணியே கண்ணுறங்கு

பெண்ணே நீ கண்ணுறங்கு

பொன்னுமணியே கண்ணுறங்கு

உன் புன்முறுவல் - கண்டு

முல்லையும் மலர்ந்ததம்மா

உன் தத்தை மொழியழகைக் கண்டு

தத்தையும் மொழி பழகியதம்மா (கண்ணே நீ)

உன் பின்னல் அழகைக் கண்டு

மேகமும் ஓடியதம்மா

உன் முக அழகைக் கண்டு

முழுமதியும் மறைந்ததம்மா (கண்ணே நீ)

உன் நடன அழகைக் கண்டு

மயிலும் நடனம் பழகியதம்மா

உன் அன்ன நடையழகைக் கண்டு

அன்னமும் நடைபழகியதம்மா" (கண்ணே நீ)

தன் குழந்தையின் அழகில், சிரிப்பில், அழுகையில், நடையில் இயற்கையுடன் ஒப்பிட்டு வர்ணித்து மகிழ்கிறாள் தாய்.

### உறவுகளின் சிறப்பு

குழந்தையின் அழுகையை அறியவும், அடித்தவர் யார், அவர்களுக்கு தண்டனை வாங்கித் தருவேன் என்று கூறுவதன் மூலம், குழந்தைக்குரிய உறவுமுறைகள் சொல்லித்தரப்படுகிறது.

"ராராரோ ராரிராரோ

ராராரோ ராரிராரோ

மாமா அடிச்சானோ

மல்லிகைப்பூ செண்டாலே (ராராரோ)

அத்தை அடித்தாரோ

அரளிப்பூ செண்டாலே (ராராரோ)

பாட்டி அடித்தாரோ

பரங்கிப்பூ செண்டாலே (ராராரோ)

சித்தி அடித்தாரோ

சின்ன கை பத்து

மெல் விரலாலே (ராராரோ)

அடிச்சார சொல்லி அழு

அவதாரம் கேட்டு வாங்கும்

அடிச்சார சொல்லி அழு

சுண்டி விரல் எடுத்து வருவோம்"

தனது குழந்தையை அடித்தவர் யார், அவர்களுக்கு தாயானவள் தண்டனை வாங்கித் தருவேன் என அழுவதற்குரிய காரணம் கேட்டறிவதாக இத்தாலாட்டு அமைகிறது.

தாலாட்டுப் பாடல்கள் என்பது தாய் தன் குழந்தைக்கு தரும் சீர் என்பர். குழந்தைக்கு கேட்கும் திறனையும், ஞாபகத்திறனை வளர்ப்பதற்கு உதவும் எனலாம். தாயும், குழந்தையும் உறவாடி மகிழ்ப் பாலமாய் அமைகிறது தாலாட்டு என்றால் மிகையாகாது.

### துணை நூல்கள்:


1. நாடு போற்றும் நாட்டுப்புறப் பாடல்கள், தேசிய விருது பெற்ற பேராசிரியர் முனைவர் நல்லாமூர் கோ. பெரியண்ணன், அம்சா பதிப்பகம், சென்னை – 600 061.
2. நாட்டுப்புறவியல் கட்டுரை, சா. வளவன், எம்.ஏ., எம்.ஃபில்., வளவன் வெளியீடு, அண்ணா நகர், சென்னை – 600 040.

ISSN : 2278-7550

பல்லவி பதிப்பகம்

2278-7550